உங்கள் விளம்பரங்கள் செய்திகளை அனுப்ப தொடர்புக்கு
9841373226
E-mail : mornningtimes@gmail.com

# மார்னிங் டைம்ஸ்

MORNING TIMES Tamil Monthly

முயன்றால் முடியும்!

தமிழ் மாத இதழ்

R.Dis.No. 871/2021
RNI.No.TNTAM/2021/81736

மலர் – 5
Volume - 5
இதழ் – 03
Issue - 03
4 பக்கங்கள்
4 Pages
விலை. 5 ரூ/–
Price. 5 Rs/-

பிப்ரவரி – 2026
February - 2026


# பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் இந்தியாவிலேயே முதலிடம்

தமிழக சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில் பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. சென்னையில் ரூ.1618 கோடியில் வெள்ளத்தடுப்பு பணிகள் நடைபெற்று இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.




சட்டசபையில் 2026–27–ம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். அதில் கூறப்பட்டிருப்பதாவது இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் இதுவரை, 36 லட்சத்திற்கும் மேலான வேலைவாய்ப்புகள் உருவாகும் வகையில், 12.37 லட்சம் கோடி ரூபாய் உறுதி அளிக்கப்பட்ட முதலீடுகளுக்கான 1,179 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

இவ்வரசு பொறுப்பேற்ற பின், 12 புதிய தொழிற்பூங்காக்கள் உருவாக்கப்பட்டு, தற்போது 49,468 எக்கர் பரப்பளவில் 54 தொழிற்பூங்காக்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், கூடுதலாக 28,392 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

தொழில் வளம் பெருகி, 2024ரு25ரும் ஆண்டில் தமிழ்நாடு 11.19 சதவீதம் பொருளாதார வளர்ச்சியை எட்டி, நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது. மேலும், மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 41.23 சதவீதம் பங்களிப்புடன் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகவும் தமிழ்நாடு உள்ளது.

தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியை பரவலான முறையில் விரிவுபடுத்துவதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் 25,500 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்கான செயல்திட்டத்தின் அடிப்படையில், 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு

மற்றும் வர்த்தகத் துறைக்கு 4,282 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்கள் பயன்பெறும் வகையில், கடந்த ஐந்தாண்டு காலத்தில் 18 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், 3735 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

‘கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ், இதுவரை 405 கோடி ரூபாய் கடன் உதவி மற்றும்

83 கோடி ரூபாய் மானியம் பெற்றுத்தர 23,879 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் தரப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில், தங்கநகைப் பூங்காவின் முதற்கட்டப் பணிகள் 81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கு 1,943 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளையும் கண்ணாடி இழை கம்பிவடம் மூலம் இணைத்து, அதிவேக அலைக்கற்றை வழங்கும் திட்டப் பணிகள், தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின் மூலம், தற்போது 11,953 (95 சதவீதம்) கிராம ஊராட்சிகளில் முடிக்கப்பட்டுள்ளது.

இந்த இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல்

சேவைகள் துறைக்கு 219 கோடு ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாசன வசதிக்காக சிறப்பு தூர்வாரும் பணிகள், காவிரி டெல்டா, பரம்பிக்குளம் ஆழியாறு, தாமிரபரணி மற்றும் வைகை உள்ளிட்ட வடிநிலங்களில் 498 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 1618 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு வடிகால்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

நீர்வளத் துறைக்கு இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 10,076 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் மின் தேவை தற்போதைய அளவைவிட இரண்டு மடங்கு உயர்ந்திடும் என்ற மதிப்பீட்டின் அடிப்படையில், 100 பில்லியன் யூனிட் கொண்ட புதுப்பிக்கத்தக்க பசுமை ஆற்றலை உருவாக்கும் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக, கன்னியாகுமரி மாவட்டம், வெள்ளிமலைப் பகுதியில் 1000 மமெகாவாட் திறன் கொண்ட நீரேற்று மின் திட்டத்தை 5,320 கோடி ரூபாய் முதலீட்டில் பொதுத்துறை தனியார் பங்களிப்புடன் உருவாக்கும் பணிக்கான முதற்கட்ட ஆய்வுகள் நிறைவடைந்துள்ளன. மேலும், நாள் முழுவதும் உறுதியளிக்கப்பட்ட பசுமை மின்சாரம் வழங்கும் நோக்கத்தோடு, இதுவரை மணிக்கு 1000 மெகாவாட் திறன் கொண்ட மின்கலன் சேமிப்புத் திட்டங்கள் உருவாக்கிட ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டுள்ளன. புதிய ஒருங்கிணைந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்திக் கொள்கை’ விரைவில் வெளியிடப்படும்.

எரிசக்தித் துறைக்கு, 18,091 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 6,211 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12,087 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பயன்பாட்டிற்கு உகந்த 3,673 பேருந்துகளை, முற்றிலும் புதுப்பித்து இயக்குவதற்காக 374 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 380 பசுமை மின் பேருந்துகள் 288 கோடி ரூபாய் மதிப்பீட்டில், போக்குவரத்துச் சேவையில் இணைக்கப்பட்டுள்ளன. அண்மையில், மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்ட சிற்றுந்து (மினிபஸ்) திட்டம் நகரங்களை ஒட்டிய ஊரகப் பகுதிகளிலும் போக்குவரத்துச் சேவையை வழங்கிடும் வகையில் 1,603 புதிய வழித்தடங்களில் வெற்றிகரமாக விரிவாக்கப்பட்டுள்ளது.



வேளாண்மைரூ உழவர் நலத்துறை சார்பில் 16 உழவர் அங்காடிகளை தொடங்கி வைத்து, 23 வேளாண்- உழவர் நலத்துறை கட்டடங்களை திறந்து வைத்து, 54 தொழில்முனைவோர்களுக்கு மதிப்புக்கூட்டும் மையங்கள் அமைக்க ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கி, இயந்திர வாடகை சேவையினை வலுப்படுத்த 672 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் சேவைகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# 2030க்குள் 33% மின்சாரப் பேருந்துகள்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதி




2030ம் ஆண்டிற்குள் 33% மின்சாரப் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். சென்னையில் தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 4.0 நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கலந்துகொண்டு பேசியதாவது:

''தி.மு.க. அரசு பொறுப்பேற்றதில் இருந்து காலநிலை மாநாட்டை சிறப்பாக நடத்திவருகிறது. 2022ம் ஆண்டு, முதலாவது காலநிலை உச்சி மாநாட்டிலேயே, இந்தியாவின் ‘நெட் ஜீரோ’ இலக்கை 2070ம் ஆண்டுக்கு முன்பே, தமிழ்நாடு அடைந்துவிடும் என்று நம்பிக்கையுடன் நான் சொன்னேன்! நான் சொன்னது சரிதான் என காட்டுவது போல இந்த மாநாடு நடைபெறுகிறது!

நம்மை நாமே சுயமதிப்பீடு செய்துகொள்ளவும், தேவைப்படக்கூடிய விஷயங்களில் Improve செய்து கொள்ளவும் தான் இந்த மாநாடு. அதிகரித்து வரும் வெப்பநிலை, அதீத மழைப்பொழிவு, புயல், வறட்சி வெப்ப அலை இப்படி எத்தனையோ இயற்கைப் பேரிடர்கள் உலகம் முழுவதும் பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. அதுவும், தமிழ்நாடு போன்ற கடலோர மாநிலங்களுக்கு காலநிலை மாற்றம் என்பது எங்கேயோ நடக்கும் சம்பவம் கிடையாது! நமக்கு அது அன்றாட நிகழ்வாக அமைந்திருக்கிறது. நாம் கொண்டு வரும் ஒவ்வொரு திட்டங்களிலும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான தடுப்பு மற்றும் தகவமைப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும். அந்த வகையில், நிறுவப்பட்ட காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவிலேயே இரண்டாவது இடமும், நிறுவப்பட்ட சூரிய ஒளி மற்றும் புதுப்பிக்கத்தக் ஆற்றல் உற்பத்தியில், இந்தியாவிலேயே நான்காவது இடமும் பெற்று, வளர்ந்து வருகின்ற மாநிலங்களில் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

# கானத்தூர் ரெட்டிக்குப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் வள்ளி எட்டியப்பன் உடன் மரியாதை நிமித்த சந்திப்பு



கானத்தூர் ரெட்டிக்குப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் வள்ளி எட்டியப்பன் மற்றும் 2வது வார்டு உறுப்பினர் செய்யது இப்ராஹிம் ஆகியோர்களை மார்னிங் டைம்ஸ் பத்திரிக்கையின் உதவி ஆசிரியர் A.அப்துல் சமது மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்தார்.

2026ஆம் ஆண்டு வெளியான மார்னிங் டைம்ஸ் சிறப்பு மலரில், கானத்தூர் ரெட்டிக்குப்பம் ஊராட்சி 2வது வார்டு உறுப்பினர் செய்யது இப்ராஹிம் அவர்களின் மக்கள் நலப் பணிகள் மற்றும் சமூக சேவைகள் குறித்து சிறப்பாக வெளியிடப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து, அந்த சிறப்பு மலர் புத்தகத்தை அவர் ஊராட்சி மன்ற தலைவருடன் பெற்றுக் கொண்டார்.

இச்சந்திப்பு அன்பும் மரியாதையும் மிக்க சூழலில் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர், நிர்வாகத்தினர் பத்திரிக்கையின் சமூக அக்கறை மற்றும் பொதுநலச் செயல்பாடுகளை பாராட்டினர்.

# பொதுமக்களுக்கு விழிப்புணர்வு

## டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் தடுக்கும் வழிமுறைகள்



1. பப்பாளி இலையின் சாறு டெங்கு நோயாளிகளுக்கு நன்மை பயக்கும்..
2. குடிநீரை நன்கு காய்ச்சி பருகவும்.
3. தண்ணீரை தேங்க விடாமல், கொசு உருவாகாமல் தடுப்பதற்கு சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ளவும்.



இருசக்கர வாகனம் ஓட்டும் போது கட்டாயம் தலைக்கவசம் இருவரும் அணிய வேண்டும்



N.அப்துல் சமது
ஆசிரியர்,
மார்னிங் டைம்ஸ்

# 2025–ஆம் ஆண்டுக்கான கலைஞர் காவல் கோப்பை

## மாநில அளவில் முதலிடம் பெற்ற விழுப்புரம் அனைத்து மகளிர் காவல் நிலையம்




தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்படும் 2025ஆம் ஆண்டிற்கான “கலைஞர் காவல் கோப்பை” விருதில், விழுப்புரம் அனைத்து மகளிர் காவல் நிலையம் மாநில அளவில் முதலிடம் பெற்று பெருமை சேர்த்துள்ளது. இவ்விருதை, விழுப்புரம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் தமரியசோபி மஞ்சுளா, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொற்கரங்களால் பெற்றுக்கொண்டார். பெண்கள் பாதுகாப்பு, புகார் பராமரிப்பு, விரைவு நடவடிக்கை மற்றும் சமூக அக்கறையுடன் செயல்பட்டதற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த சாதனை, காவல்துறையின் அர்ப்பணிப்பு பணிக்கும், பெண்களின் பாதுகாப்பிற்கான உறுதிப்பாட்டிற்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

# தாம்பரம் மாநகராட்சியின் 2026-2027 நிதிநிலை அறிக்கை தாக்கல்




தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் தலைமையில், தாம்பரம் மாநகராட்சியின் 2026-2027ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை (10/02/2026 - செவ்வாய்க்கிழமை) மாமன்றக் கூட்டரங்கில் தாக்கல் செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர், இ.ஆ.ப., துணை மேயர் கோ.காமராஜ், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் ஆ.ரமணி, மண்டலக் குழுத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு, நகராட்சியின் நிதி நிலை, திட்டங்கள் மற்றும் வரவுச் செலவுகள் குறித்த விவரங்களை ஆராய்ந்தனர். நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வது மாநகராட்சியின் நிதி மேலாண்மை மற்றும் திட்டங்களின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் முக்கிய நிகழ்வாகும்.

# பல்லவர் வணிகர் பேரவை மாமல்லன் முதலாம் நரசிம்மவர்ம பல்லவர் பிறந்தநாள் விழா




செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் அடுத்துள்ள பொழிச்சலூர் ஊராட்சியில் (08/02/2026 - ஞாயிற்றுக்கிழமை) பல்லவர் வணிகர் பேரவை சார்பில் மாமல்லன் முதலாம் நரசிம்மவர்ம பல்லவர் அவர்களின் பிறந்தநாள் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு பல்லவர் வணிகர் பேரவை நிறுவனர் மற்றும் மாநில தலைவர் ந.சுரேஷ் அவர்கள் தலைமையேற்று நடத்தினார். விழாவில் மாமல்லன் முதலாம் நரசிம்மவர்ம பல்லவர் அவர்களின் திரு உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

மார்னிங் டைம்ஸ்
தமிழ் மாத இதழ்

**ஆசிரியர்**
N.அப்துல் சமது B.Com.,

**தலைமை செய்தியாளர்**
S.அப்துல் ரஹ்மான்

**இணை ஆசிரியர்**
A.பாத்திமா பிர்தௌஸ் MBA., M.A., B.Ed.,

**கௌரவ ஆசிரியர்**
விக்னேஷ்.J.AMIE., BCA., DPM,

**துணை ஆசிரியர்கள்**
A.காஜா மொய்தீன் (அரசியல் பிரிவு)
K.N.முஹம்மது ஆரிஃப்
S.முகம்மது ரவூப்

**உதவி ஆசிரியர்கள்**
A.அப்துல் சமது
M. டெனிஸ்டன்
B. பூபதி

**உதவி ஆசிரியர்கள்(கல்விப் பிரிவு)**
M.L.செய்யது அலி M.Phil, B.Ed.,
M.அப்துல் ரஹ்மான் M.B.A.,

**மண்டல செய்தியாளர்**
K.N.அப்துல் ரஜாக்

**மாவட்ட செய்தியாளர்கள்**
K.H.ரியாஸ் அலி அஹமது (சென்னை மாவட்டம்)
S.கரீம் (திருவள்ளூர் மாவட்டம்)
M.G.தமீம் அன்சாரி (சென்னை வடக்கு)
J. ரசூல் மொய்தீன் (சென்னை தெற்கு)
M.பிரேம் குமார் (செங்கல்பட்டு மாவட்டம்)
M.முஹம்மது யூசப் சைபுல்லாஹ் (சென்னை தெற்கு)
R.நாகராஜன் (காஞ்சிபுரம்)

**செய்தியாளர்கள்**
நிஜாமுதீன் (சேப்பாக்கம் தொகுதி)
A.அபிப் ரஹ்மான் (பல்லாவரம் தொகுதி)
S.முகம்மது ஷேக் (தாம்பரம் தொகுதி)
K.முகமது சுலைமான் (மாங்காடு)
G.ஜீலானி (பெரம்பூர்)
K.சரவணன் (கொடுங்கையூர்)
K.பிரபு (M.K.B நகர்)

**சட்ட ஆலோசகர்கள்**
S.K.தமீம் அன்சாரி.B.A.B.L., (திருநெல்வேலி)
K.முகம்மது பிலால் அலி B.Tech., MBA(HRM)., LLB(Hons)., ML., PGD(IPR)., LIII (சென்னை)
K.இளங்கோவன் (குன்றத்தூர்)
M.சீனி அபுபக்கர் சித்திக் M.A.B.L., (சென்னை)
R. உதயணன் B.A.B.L., (செங்கல்பட்டு)
A. கார்த்திக் B.A.B.L., (காஞ்சிபுரம்)
C.சசிகுமார் B.A.B.L., (மதுரை உயர் நீதிமன்றம்)
E. கவியரசன் B.A.B.L., (திருச்சி)

# மரியநிவாஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியின் 40-ஆம் ஆண்டு விழா

செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் அருகிலுள்ள பொழிச்சலூர் ஊராட்சியில் வரதம்மாள் அறக்கட்டளையின் மூலம் இயங்கி வரும் மரியநிவாஸ் மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளியின் 40ஆம் ஆண்டு விழா 06/02/2026 (வெள்ளிக்கிழமை) பள்ளி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழா, நிறுவனத் தலைவர் J.ரங்கநாதன் தலைமையில், தாளாளர் R.பத்மினி, துணைத் தலைவர் K.R.ராகவேந்திரன், தலைமை ஆசிரியர் V.விஜய குமாரி மற்றும் உதவி தலைமை ஆசிரியர் C. தனசேகரன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி, தமிழ் தாய் வாழ்த்துடன் விழாவைத் தொடங்கி வைத்தனர்.




விழாவில் தலைமை ஆசிரியர் V.விஜயகுமாரி மற்றும் உதவி தலைமை ஆசிரியர் C.தனசேகரன் வரவேற்புரை நிகழ்த்தி, பள்ளியின் 40 ஆண்டுகால கல்விச் சேவையை நினைவுகூர்ந்தனர். மேலும், இப்பள்ளியில் கல்வி கற்ற முன்னாள் மாணவர்கள் மருத்துவம், வழக்கறிஞர் தொழில் மற்றும் அரசு துறைகளில் உயர்ந்த பதவிகளில் உள்ளனர் என்பதையும் அவர்கள் பெருமையுடன் எடுத்துரைத்தனர். இந்நிகழ்ச்சியில், விடுமுறை எடுக்காமல் முறையாக வருகை புரிந்த மாணவ, மாணவியர்களும், 2024-2025 கல்வியாண்டில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் உயர்ந்த மதிப்பெண் பெற்ற மாணவர்களும், அவர்களுக்கு பயிற்சி அளித்த ஆசிரியர்களும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப் பட்டனர். பள்ளியின் வளர்ச்சிக்காக சிறப்பாக பணியாற்றிய தலைமை ஆசிரியர் மற்றும் உதவி தலைமை ஆசிரியருக்கும் சிறப்பு விருதுகள் வழங்கப் பட்டன. மேலும், L.K.G, U.K.G உள்ளிட்ட மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் கருத்தூட்டும் நிகழ்வுகள் நடைபெற்றன. மாணவர்கள் வழங்கிய நிகழ்ச்சிகளை பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் உற்சாகத்துடன் கண்டு ரசித்தனர்.

# ஆலந்தூர் ஜிந்தே மஸ்தான் தர்கா - உரூஸ் விழா

சென்னை, ஆலந்தூர் பகுதியில் அமைந்துள்ள ஹஜ்ரத் சையதுஷா அலி மஸ்தான் ஷமன் ஷா (ரலி) என அறியப்படும் ஜிந்தே மஸ்தான் தர்காவில் 13/02/2026 (வெள்ளிக்கிழமை) இரவு உரூஸ் விழா சிறப்பாக நடைபெற்றது.



இந்த உரூஸ் விழாவில் பெருந்திரளான இஸ்லாமிய சமுதாய மக்கள் மட்டுமல்லாது, பிற மதங்களைச் சார்ந்த பொதுமக்களும் கலந்து கொண்டு தர்காவில் ஜியாரத் செய்து, ஹஜ்ரத் சையதுஷா அலி மஸ்தான் ஷமன் ஷா (ரலி) அவர்களின் பெயரில் சிறப்பு துவாக்களை ஓதினர். விழாவில் ஆன்மிக நிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன், தர்கா நிர்வாகத்தின் சார்பில் வருகை தந்த அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது. மத நல்லிணக்கம், ஆன்மிக ஒருமைப்பாடு மற்றும் சகோதரத்துவ உணர்வை வெளிப்படுத்தும் விதமாக உரூஸ் விழா சிறப்பாகவும் அமைதியாகவும் நடைபெற்றது.

## பொழிச்சலூர் அரசு நடுநிலைப் பள்ளியில்

# மார்னிங் டைம்ஸ் சிறப்பு மலர் வழங்கல்




செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் அருகிலுள்ள பொழிச்சலூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் அரசு நடுநிலைப் பள்ளியில், பள்ளியின் தலைமை ஆசிரியர் கு.சண்முகம், பள்ளி மேலாண்மை குழு (SMC) தலைவர் பரக்கத் நிஷா, சத்துணவு அமைப்பாளர் கௌசியா பேகம் மற்றும் சத்துணவு உதவியாளர்களை மார்னிங் டைம்ஸ் பத்திரிகையின் துணை ஆசிரியர் எஸ்.முஹம்மது ரவூப் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது, 2026 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மார்னிங் டைம்ஸ் பத்திரிகையின் சிறப்பு மலர் பள்ளி நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது. தொடர்ந்து, பள்ளியின் கல்வி முன்னேற்றம், மாணவர்களின் சாதனைகள் மற்றும் சத்துணவு திட்டத்தின் செயல்பாடு குறித்து கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பு மகிழ்ச்சியான சூழலில் நடைபெற்றது. பள்ளி நிர்வாகம் மற்றும் ஆசிரியர்கள் இதற்காக நன்றி தெரிவித்து, கல்வி வளர்ச்சிக்கு ஊடகங்களின் ஒத்துழைப்பு பாராட்டத்தக்கது எனக் குறிப்பிட்டனர்.

# ஸ்ரீ சுசிலா அறக்கட்டளை சார்பில் மாபெரும் இலவச மருத்துவ முகாம்




செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியத்திற்குட்பட்ட கிழக்கு கடற்கரை சாலை, கானத்தூர் ரெட்டிக்குப்பம் எல்லையம்மன் கோயில் அருகில், ஸ்ரீ சுசீலா அறக்கட்டளை சார்பில் இலவச மருத்துவ சிறப்பு முகாம் இரண்டு நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. அறக்கட்டளை நிறுவனர் தலைவர் இரா. ஐயப்பன் மற்றும் கௌதம பிரியா ஐயப்பன் ஆகியோரின் ஏற்பாட்டில், அந்நூர் கண் மருத்துவமனை, மாதா பிதா மருத்துவமனை மற்றும் தாவுத் பல் கிளினிக் ஆகியவை இணைந்து பிப்ரவரி 14ஆம் தேதி சனிக்கிழமை மற்றும் 15ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல் மதியம் 3 மணி வரை முகாமை நடத்தினர்.

இந்த முகாமில் கணினி மூலம் கண் பரிசோதனை, மருத்துவ ஆலோசனை, இரத்த அழுத்தம் (BP) மற்றும் உடல் எடை பரிசோதனை, இரத்த சர்க்கரை பரிசோதனை, பல் பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு மருத்துவ சேவைகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. மேலும், கண்புரை அறுவை சிகிச்சை மற்றும் மூக்குக் கண் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படுவதுடன், இதய அறுவை சிகிச்சைக்கு 50 சதவீத செலவை ஸ்ரீ சுசீலா அறக்கட்டளை சார்பில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இம்முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு மருத்துவ சேவைகளைப் பெற்றனர்.

# ரமலான் நோன்புக்காக 8,700 டன் அரிசி வழங்க அரசு அனுமதி

பள்ளிவாசல்களுக்குத் தேவைப்படும் அரிசிக்கான மொத்த அனுமதியை வழங்க மாவட்ட கலெக்டர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி, 8,700 டன் அரிசி மொத்த அனுமதி மூலம் பள்ளிவாசல்களுக்கு வழங்கப்படும். இதனால், அரசுக்கு 20 கோடியே 88 லட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.



இது சம்பந்தமாக கூட்டுறவு, உணவுத் துறை அரசு செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

"ஒவ்வொரு ஆண்டும் புனித இரமலான் மாதத்தில் நோன்பு நோற்கும் இஸ்லாமிய மக்களுக்கு நோன்புக் கஞ்சி தயாரித்து வழங்கும் பொருட்டு பள்ளிவாசல்களுக்கு பச்சரிசி தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளைப் போலவே, 2026-ம் ஆண்டிலும் ரமலான் மாதத்தில் நோன்புக் கஞ்சி தயாரிக்க பள்ளிவாசல்களுக்கு அரிசி வழங்க வேண்டும் என்று இஸ்லாமிய மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன.

2026-ம் ஆண்டு, இரமலான் மாதத்தில் நோன்பு நோற்கும் இஸ்லாமிய மக்களுக்கு நோன்பு கஞ்சி தயாரிப்பதற்கு ஏதுவாக பள்ளிவாசல்களுக்கு மொத்த அனுமதியின்கீழ் நோன்பு கடைபிடிக்கப்படும் நாட்களுக்கு பச்சரிசி வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்". இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு இளம் உலமா முன்னேற்றப் பேரவையின் ஐம்பெரும் விழா





தமிழ்நாடு இளம் உலமா முன்னேற்றப் பேரவை சார்பில் 2026ஆம் ஆண்டிற்கான ஸனது பெற்ற இளம் உலமா பெருமக்களை கௌரவிக்கும் விழாவும், பரிசளிப்பு நிகழ்ச்சியும், பேரவையின் பைத்துல்மால் துவக்க விழாவும் இணைந்து 11/02/2026 (புதன்கிழமை) சென்னை நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில், மௌலானா மௌலவி அல்ஹாஜ் கிராண்ட் முஃப்தி N.P. உஸ்மான் முஹ்யித்தீன் பாகவி (ஃபாஜில் மழாஹிரி), தமிழ்நாடு அரசு தலைமை காஜி, சென்னை தலைமை முஃப்தி மற்றும் அல்பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றினர். மேலும், மாணவ, மாணவியரின் ஆய்வுத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டதுடன், மாநில அளவிலான கட்டுரைப் போட்டி வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. சமூக மற்றும் மார்க்க சேவையாளர்களும் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

இந்நிகழ்ச்சியில் மௌலானா மௌலவி M.I. முஹம்மது மன்சூர் காஷிஃபி காசிமி, அல்ஹாஜ் S.M.ஹிதாயத்துல்லாஹ், அல்ஹாஜ் S.M.செய்யது அப்துல் காதர், அல்ஹாஜ் அ.முஹம்மது ஜியாவுதீன் மேனாள் மாவட்ட நீதிபதி உறுப்பினர், மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம் (தமிழ்நாடு அரசு), அல்ஹாஜ் S.அஹமது மீரான், நிஸ்வான், மௌலானா மௌலவி அல்ஹாஜ் S. முஹம்மது முஹையத்தீன் மதனீ, பாகவி, அஜ்ஹரீ மற்றும் சவூதி அரசின் மேனாள் துபை தூதர் மௌலவி ஹாஃபிழ் ஹைதர் அலி இம்தாதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். விழா மதிப்புமிக்க ஆன்மிக மற்றும் சமூக ஒற்றுமைச் செய்தியுடன் நிறைவுற்றது.

# இருமொழிக் கவிஞர் வானவில் கே.ரவியின் ‘பன்முகத்தன்மையும் படைப்புத்திறனும்’ 138வது தேசியக் கருத்தரங்கம் நிகழ்ச்சி





சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட தன்னாட்சி நிறுவனமாகவும், 4வது சுழற்சியில் 3.61/4 மதிப்பெண்களுடன் NAAC அங்கீகாரம் பெற்றதாகவும் விளங்கும் சென்னைப் புதுக் கல்லூரியில், இருமொழிக் கவிஞர் வானவில் கே.ரவி அவர்களின் ‘பன்முகத்தன்மையும் படைப்புத்திறனும்’ என்ற தலைப்பில் 138வது தேசியக் கருத்தரங்கம், கடந்த மாதம் இராயப்பேட்டை பீட்டர் சாலையில் அமைந்துள்ள கல்லூரி வளாகத்தில் உள்ள MIIT அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த கருத்தரங்கத்தை தமிழ்த்துறை, ஆங்கிலத்துறை மற்றும் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம், பாலக்காடு (கேரளா) ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. நிகழ்ச்சி, சென்னைப் புதுக் கல்லூரியின் முதல்வர் முனைவர் மா.அஸ்ரார் ஷெரீஃப் தலைமையில் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கியது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம், பாலக்காடு இயக்குனர் முனைவர் கு.அ.ராஜாராம், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சே.சைய்யத் அபுதாகீர், ஆங்கிலத் துறைத் தலைவர் (பொறுப்பு) பேராசிரியர் புர்கானுதீன் தல்வி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர்.

மேலும், சென்னைப் புதுக் கல்லூரியின் ஆங்கிலத்துறைத் தலைவர் மற்றும் தேர்வாணையர் பேராசிரியர் அ.சைய்யத் சர்மத் அகமது, மேனாள் துணை முதல்வரும் தமிழ்த் துறைத் தலைவருமான கலைமாமணி முனைவர் மு.இ. அகமது மரைக்காயர்,

தமிழ்த்துறைத் திறனாய்வாளர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்களான முனைவர் மு.ஜாபர் சாதிக் அலி, முனைவர் ம.மஸ்தான், முனைவர் பா.மொகிதீன் பாட்சா,

ஆங்கிலத்துறைத் திறனாய்வாளர்களான முனைவர் ஜகீர் அப்துல் கஃபூர், பேராசிரியர் கா. முகமது நஜிப், தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் அ.அக்பர் அலி, நிகழ்ச்சி தொகுப்பாளராக முனைவர் அ.அப்சர் உள்ளிட்ட பல பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் கலந்து கொண்டு கருத்தரங்கத்தை சிறப்பித்தனர்.

இந்த தேசியக் கருத்தரங்கம், இருமொழிக் கவிஞர் வானவில் கே. ரவியின் படைப்புலகப் பங்களிப்புகள், அவரது பன்முகத் தன்மை மற்றும் இலக்கியச் சாதனைகள் குறித்து ஆழமான ஆய்வுகளுக்கும், கருத்துப் பரிமாற்றங்களுக்கும் வாய்ப்பளித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# உசைனி உயர்நிலைப் பள்ளியில் ரூ.25 லட்சம் மதிப்பிலான நலத்திட்டங்கள் வழங்கல்







சென்னை மாவட்டம், மண்டலம்–11, ராமபுரத்தில் இயங்கி வரும் உசைனி உயர்நிலைப் பள்ளியில் 11/02/2026 (புதன்கிழமை) நாகசே இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் மார்பு நிறுவனத்தின் சார்பில் ரூ.25 லட்சம் மதிப்பிலான நலத் திட்டங்கள் வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடை பெற்றது.

இந்நிகழ்ச்சியில் 120 மாணவியர்களுக்கு இலவச ஹீரோ (மிஸ் இந்தியா) மிதி வண்டிகள் வழங்கப்பட்டன. மேலும், 500 மரக்கன்றுகள் நட்டு “மார்பு பசுமைக் காடு” அமைக்கும் திட்டம் தொடங்கப்பட்டதுடன், பள்ளி சுற்றுச்சுவரில் இரும்புக் கம்பி வேலிகள் அமைக்கப்பட்டன. மாணவியர்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு நாப்கின் தானியங்கி இயந்திரமும் வழங்கப்பட்டது.

பள்ளிதலைமையாசிரியர் கே.எம். முகமது உமர் வரவேற்புரை நிகழ்த்தினார். மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–11 குழுத் தலைவர் நொளம்பூர் வே. ராஜன் ஆகியோர் மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர். 154வது வார்டு மாமன்ற உறுப்பினர் வ. செல்வகுமார், 155வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜு, உசைனி அறக் கட்டளை தலைவர் ஜனாப் டாக்டர் பேராசிரியர் சையத் இம்தியாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மார்பு அறக்கட்டளை நிறுவனர் காதிர் ரகு வம்சி மற்றும் ஒருங்கிணைப்பாளர் டைட்டஸ் கிரன் உள்ளிட் டோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். பெருந்திரளான பெற்றோர் கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

## தமிழ்நாட்டில் காலியாகும் 6 இடங்கள்

# மார்ச் 16-ந் தேதி மாநிலங்களவைத் தேர்தல்

மாநிலங்களவைத் தேர்தலுக்கான தேதியை இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு, மகாராஷ்டிரா, ஒடிசா, மேற்கு வங்கம், அசாம், பீகார், சத்தீஷ்கர், ஹரியாணா, ஹிமாசலப் பிரதேசம், தெலுங்கானா உள்ளிட்ட இடங்களில் மொத்தமாக 37 இடங்கள் காலியாகின்றன. தமிழகத்தில் மட்டும் 6 இடங்கள் காலியாகின்றன. இதில் 17 எம்.பி.க்கள் பதவிக்காலம் ஏப்ரல் 2ம் தேதியும், மீதமுள்ள 20 எம்பிக்களின் பதவிக்காலம் ஏப்ரல் 4ம் தேதியும் நிறை வடைகிறது. தமிழ்நாட்டில் உள்ள மாநிலங்களவை எம்பிக்கள் என். ஆர். இளங்கோ, கனிமொழி சோமு, திருச்சி சிவா, தம்பிதுரை, ஜி.கே. வாசன், பி. செல்வராசு உள்ளிட் டோரின் பதவிக்காலம் ஏப்ரலில் நிறைவடையவுள் ளது. மாநிலங்களவைத் தேர்தலுக்கான அறிவிப்புகள் வருகிற பிப்ரவரி 26ம் தேதி வெளியாகிறது.

அதைத் தொடர்ந்து மார்ச் 5ம் தேதி வேட்பு மனுக்கள் தாக்கலுக்கான கடைசி நாளாகும். மார்ச் 6ம் தேதி வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறுகிறது.

வேட்பு மனுவைத் திரும்ப பெற மார்ச் 9ம் தேதி கடைசி நாள். மாநிலங் களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு மார்ச் 16ம் தேதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து அன்று மாலையே வாக்கு எண்ணிக்கையும் நடை பெறவுள்ளது. சட்டப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப் படையில் தமிழ்நாட்டில் திமுக சார்பில் 4 எம்.பிக்களையும், அதிமுக சார்பில் 2 எம்.பிக்களையும் தேர்வு செய்ய முடியும்.

**இருசக்கர வாகனம் ஓட்டும் போது கட்டயமாக தலைக்கவசம் அணிய வேண்டும்**

K.N.Abdul Razack
9171721973
9043555124
knabdulrazak@gmail.com
abcwebsite.com
686, Ayub Sait Street
Bilal Nagar
Kanathur
AMS SIGN
All Sign Board

## செங்கல்பட்டு மாவட்ட அளவிலான

# அரசு பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி





செங்கல்பட்டு மாவட்டத்தில், தமிழ் வளர்ச்சி துறை சார்பில், 18/02/2026 புதன்கிழமை இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில், மாவட்ட அளவிலான அரசு பள்ளி மாணவர்களுக்கான “அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள்” பேச்சுப்போட்டி நடைபெற்றது. இப்போட்டியில், மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில், புனித தோமையர் மலை பல்லாவரம் அடுத்த பொழிச்சலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பயிலும் 7ஆம் வகுப்பு மாணவி வ. மீனலோஷினி பேச்சுப்போட்டியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற்றார்.

பேச்சுப்போட்டியில் தேர்ச்சி பெற்ற மாணவிக்கு தமிழ் வளர்ச்சி துறை சார்பில் சிறப்பு பரிசு, பாராட்டு சான்றிதழ் மற்றும் ரூ.2000 ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

இப்போட்டியில் கலந்து கொள்ள வாய்ப்பளித்த தமிழ் வளர்ச்சி துறைக்கு, பொழிச்சலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் கு.சண்முகம், ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்தனர்.

## மெரினா கடற்கரையில் ‘‘ரோப் கார்’’ சேவை

# சென்னை மாநகராட்சி பட்ஜெட்டில் அறிவிப்பு



சென்னை மெரினாவில் கலங்கரை விளக்கம் முதல் அண்ணா நினைவிடம் வரை ‘‘ரோப் வே’’ கார் வழித்தடம் அமைக்கப்படும் என்று சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கையில் மேயர் பிரியா அறிவித்துள்ளார்.

ரிப்பன் கட்டிட கூட்டரங்கில் சென்னை மாநகராட்சியின் பட்ஜெட் கூட்டம் நடைபெற்றது. அப்போது, 2026–27ம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. சில முக்கியமான திட்டங்களை அப்போது மேயர் அறிவித்தார்.

* கோடை காலங்களில் தூய்மை பணியாளர்களுக்கு மோர் வழங்கப்படும்.
* சென்னை மெரினா கலங்கரை விளக்கம் முதல் அண்ணா நினைவிடம் வரை ரோப் கார் சேவை.
* வீடு இல்லாதவர்களுக்கு ரூ.12 கோடி செலவில் தற்காலிக தங்கும் இடம் அமைக்கப்படும்.
* சென்னை மாநகராட்சி பூங்காக்களில் மரங்கள் மூலம் பிராணவாயு உற்பத்தி செய்ய ஏதுவாக பசுமை சென்னை திட்டம் அறிமுகம் செய்யப்படும்.
* சென்னை பக்கிங்காம் கால்வாய் வழித்தடத்தில் நகர்ப்புற பசுமையாக்கள் திட்டம்
* ரூ.45 கோடியில் மேம்படுத்தப்படும்.
* மெரினா, பெசன்ட் நகர், வண்ணாரப்பேட்டை, நுங்கம்பாக்கம் உள்ளிட்ட 20 முக்கிய பகுதிகளில்
* சீரமைக்கப்பட்ட ஸ்மார்ட் பார்க்கிங் திட்டம் செயல்படுத்தப்படும்.
* தொற்றுநோய் மருத்துவமனையில் புறநோயாளி பிரிவு கட்டடம் கட்ட ரூ.6 கோடி ஒதுக்கீடு
* கருப்பை வாய் புற்றுநோய் கண்டறியும் ஹெச்பிவி சோதனை கிட் கொள்முதல் செய்ய சென்னை மாநகராட்சி பட்ஜெட்டில் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு.
* சிறப்பு குழந்தைகளுக்கான பள்ளி பொது தனியார் பங்களிப்புடன் 14 மண்டலங்களில் நிறுவப்படும். அண்ணா நகர், தி.நகர், நுங்கம்பாக்கம், அடையாறு போன்ற இடங்களில் மின் வாகன மின்னேற்ற நிலையம் அமைக்கப்படும் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அதுபற்றிய விவாதம் மாமன்ற கூட்டத்தில் நடைபெறும். விவாதத்திற்கு பின்னர் பட்ஜெட் மீது ஒப்புதல் அளிக்கப்படும்.

வீடு விற்பனைக்கு
சென்னை திருவல்லிக்கேணி ஐஸ்ஹவுஸ் பகுதியில் தொண்டைக்கான் மக்கான் இரண்டாவது தெருவில் வீடு விற்பனைக்கு உள்ளது
தொடர்புக்கு:866 786 7217

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நமது நிர்வாகம் பொறுப்பல்ல. அனைத்து சட்ட சம்பந்தப்பட்ட வழக்குகளும் சென்னை நகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.

# திருவல்லிக்கேணி லெப்பை ஜமாஅத் மஸ்ஜிதில் மதரஸா அன்வாருல் ஹுதா - ஹாபிழ் பட்டமளிப்பு விழா நிகழ்ச்சி



மதரஸா அன்வாருல் ஹுதா ஆமிர் கலீமி அரபிக் கல்லூரியின் ஹிப்ழ் பிரிவு சார்பில் ஹாபிழ் பட்டமளிப்பு விழா 14.02.2026 (ஹிஜ்ரி 1447, ஷஃபான் பிறை 25) சனிக்கிழமை அஸர் தொழுகைக்கு பிறகு திருவல்லிக்கேணி, மல்லன் பொன்னப்ப தெரு, லெப்பை ஜமாஅத் மஸ்ஜித் இல் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு மதரஸா தலைவர் அல்ஹாஜ் றி.கி.அக்பர் அலி தலைமை தாங்கினார். லெப்பை ஜமாஅத் மஸ்ஜித் முத்தவல்லி S.M.முஹம்மது அப்பாஸ் மற்றும் மதரஸா, மஸ்ஜித் நிர்வாகிகள் முன்னிலையில் வகித்தனர்.

மதரஸா மாணவர் கிராஅத் ஓதியதன் மூலம் நிகழ்ச்சி தொடங்கியது. வரவேற்புரையை லெப்பை ஜமாஅத் மஸ்ஜித் தலைவர் அல்ஹாஜ் K.A. ஜஃபர் ஜலாலுதீன் வழங்கினார். மதரஸா செயலாளர் P.A.முஹம்மது பிலால் விளக்கவுரை ஆற்றினார். துவக்கவுரையை மௌலானா மௌலவி M.செய்யது முஹம்மத் ஹஸனி, M.A., M.Phil., (இமாம்) மற்றும் மௌலானா மௌலவி கி.அல்தாப் உசேன் மன்பஈ (இமாம்) ஆகியோர் வழங்கினர்.

விழாவில் சிறப்பு வாழ்த்துரையை தமிழ்நாடு மாநில ஜமாஅத்துல் உலமா சபை பொதுச்செயலாளர் அல்ஹாஜ் மௌலானா மௌலவி, அல்ஹாபிழ் டாக்டர் V.S.அன்வர் பாதுஷா உலவி (M.A., M.Phil., Ph.D.) அவர்கள் "குர்ஆனோடு உறவாடுவோம்" என்ற தலைப்பில் வழங்கினார்.

பட்டமளிப்பு நிகழ்வில் அல்லாமா, அல் ஆரிப் பில்லாஹ் சையது மன்ஜூர் அஹ்மது ரஷீதி ஷாஹ் ஆமிரி ஹழ்ரத் கிப்லா (தலைவர் S.A.K. கல்வி குழுமம்) அவர்கள் ஹாபிழ் பட்டங்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

இவ்விழாவில் மஜீத் நிர்வாகிகள், முஹல்லா வாசிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## 25 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதிக்கு மத்திய அரசு ஒப்புதல்

உள்நாட்டு சந்தையை நிலைப்படுத்தவும், விவசாயிகளுக்கு லாபகரமான வருமானத்தை உறுதி செய்யவும், 25 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இது விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதற் கான மத்திய அரசின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதாக உணவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. நடப்பு நதியாண்டின், தனியார் நிறுவனங்களிடம் கோதுமை இருப்பு 75 லட்சம் டன்னாக உள்ளதாக தெரியவந்துள்ளது. இதே காலத்தில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இது கிட்டத்தட்ட 32 லட்சம் டன் அதிகமாகும். ஏப்ரல் 1, 2026 நிலவரப்படி இந்திய உணவுக் கழகத்திடம் மத்திய தொகுப்பில் மொத்த கோதுமை இருப்பு சுமார் 182 லட்சம் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கோதுமை ஏற்றுமதியால், உள்நாட்டு உணவுப் பாதுகாப்புத் தேவை பாதிக்காது என்பதை அமைச்சகம் மீண்டும் உறுதி செய்துள்ளது.

## டிஎன்பிஎஸ்சி தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலராக ஸ்ரீ வெங்கடபிரியா பொறுப்பேற்றார்





குரூப் 2, 2ஏ பதவிகளுக்கான முதன்மைத் தேர்வு கடந்த 8ந்தேதி நடந்தது. அன்றைய தினம் காலையில் குரூப் 2 ஏ பதவிக்கான பாடங்களுக் கான தேர்வும், பிற்பகலில் குரூப்2, 2ஏ பதவிகளுக்கான தகுதித்தாள் தேர்வும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் ஹால்டிக்கெட் ஒதுக்கியதில் ஏற்பட்ட குளறு படி காரணமாக அன்றைய தினம் நடைபெற இருந்த தேர்வு ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் அது குறித்த தேர்வு தேதி அறிவிக்கப்பட்டது. அதன்படி, அடுத்த மாதம் (மார்ச்) 15ந்தேதி ஒத்தி வைக்கப்பட்ட அந்த தேர்வுகள் நடைபெற உள்ளது.

இதற்கிடையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வுகள் கட்டுப்பாட்டு அலுவலர் சண்முகசுந்தரம் ஐஏஎஸ் அதிரடியாக இடம் மாற்றம் செய்யப்பட்டு காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டார். மேலும் 5 க்கும் மேற்பட்ட டிஎன்பிஎஸ்சி அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப் பட்டனர்.

இந்த நிலையில், டி.என்.பி.எஸ்.சி.யில் புதிய தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலராக ஸ்ரீ வெங்கடபிரியா ஐ.ஏ.எஸ். பொறுப்பேற்றுள்ளார். குரூப்2, 2ஏ தேர்வு குளறுபடி காரணமாக தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் சண்முகசுந்தரம் மாற்றப்பட்ட நிலையில் கடந்த 14ம் தேதி வெங்கட பிரியா பொறுப்பேற்றதாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவித்துள்ளது.

























Owned Published and Printed by **S.ABDUL RAHMAN** Printed at **CHENNAI OFFSET PRINTERS** , No.19/1, 21/2, KitabathKhan Bhadur Street, Ellies Road, Chennai - 600002, and Published from No. 15/9, Thondaikhan Makhan 2nd Lane, Ice House, Triplicane,Chennai - 600 005. Editor: **K.N.ABDUL SAMAD**